Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களைப் பொருத்தவும், மிதப்புப் பற்களுக்குச் சிறந்த முறையில் கிளிப் போடவும் நாடுங்கள்.

(சி-721)

எரிக் கனேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்
564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2222486
கிளை - கொக்குவில், சுன்னாகம்.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 25 (29.03.2003) சனிக்கிழமை இதழ் :177

## ஜே.வி.பியின் ஏற்பாட்டில் அமெரிக்க எதிர்ப்பு பேரணி



எரிக்கப்படும் புஷ்ஷின் கொடும்பாவி.

ஈராக்கில் தாக்குதலை நடத்தும் அமெரிக்காவிற்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று, ஜே.வி.பி. தலைமையில் நேற்றுக் கொழும்பில் இடம் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் 2000 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மெய்ன் ஸ்ரீற்றை அடைந்து, அதனூடாக கொழும்பு பொதுநூலகத்தை அடைந்தவேளையில் பொலிஸார் அவர்களை எதிர்கொண்டு மேலே செல்ல விடாது தடுத்தனர்.

அவர்கள் பொலிஸாரின் பேச்சையும் மீறி அமெரிக்கத் தூதரகத்தை அடைய முற்பட்ட வேளையில் கலகமடக்கும் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். இதன்போது கூட்டம் சிதறி ஓடியது.

இச்சம்பவத்தின்போது உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் காயமடைந்தனர்.

இதேவேளை, அமெரிக்காவிற்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி நீர்கொழும்பு, கிழக்கு மாகாணம் ஆகியவற்றிலும் நேற்று இடம்பெற்றுள்ளது.

### விண்ணாணம் விநாசியர்



ஈராக்கில் யுத்தமெண்டால், எதிர்ப்பு - இலங்கையில் மட்டும் வெல்லப் பாகு!

### மிதிவெடியில் காலிழப்பு

அரியாலையில், இராணுவத்தினர் வெளியேறிய பகுதியில் காலைக்கடன் கழிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தார்.

நேற்றுக்காலை அரியாலை முள்ளிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் இதேஇடத்தைச் சேர்ந்த கந்தசாமி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் குழுவினர் கிளிநொச்சி வந்துசேர்ந்தனர்



மட்டக்களப்பில் தரையிறங்கிய கருணா அம்மான், விமானிக்குக் கைலாகு கொடுக்கிறார்.

ஜப்பானில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெற்ற 6 ஆம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளச் சென்ற விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்று தாயகம் திரும்பினர்.

நேற்று முன்தினம் ஜப்பானில் இருந்து (10 ஆம் பக்கம் பார்க்க)

# சீன ட்ரோலர் மீதான தாக்குதல் வேறு ஆயுதக்குழுவே நடத்தியது

## அரசு, புலிகளிடம் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை ஒப்படைப்பு

(கொழும்பு)

**அண்மையில் முல்லைத்தீவுக் கடலில் தாக்கியழிக்கப்பட்ட சீன மீன்பிடி ட்ரோலர், இப்பகுதியில் வேறு ஏதாவது ஆயுதக் குழுவினால் தாக்கப்பட்டிருக்கலாம். விடுதலைப் புலிகளோ, கடற்படையோ இத்தாக்குதலை நடத்தியதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லையென, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இதுதொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.**

முல்லைத்தீவுக் கடற்கரைக்கு அப்பால் சீன மீன்பிடிப்படகு தாக்கப்பட்டது சம்பந்தமாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு - அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையை, அரசாங்கத் திடமும் விடுதலைப் புலிகளிடமும் நேற்றுச் சமர்ப்பித்தோம். சீன மீன்பிடிக்கப்பல் மீதான தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் அமைப்போ அல்லது அரசோ காரணம் என்று கூறமுடியாது. இதற்குக் கிடைத்த ஆதாரங்கள் தீர்க்கமான வகையில் இருக்கவில்லை. புலிகள், அரசு அல்லாத வேறு ஒரு ஆயுதக்குழு இதைச் செய்திருக்கலாம். இது அமைதி வழிக்கு ஆபத்தானதொன்று என, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் - சீனப் படகு தாக்கப்பட்டது சம்பந்தமாக தெரிவித்துள்ளார்.

சீன ட்ரோலர் மீதான தாக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக் போரை இலங்கை ஆதரிக்கவில்லை

(கொழும்பு)

ஈராக்கிற்கு எதிரான போரை இலங்கை ஆதரிக்கவில்லை என, இலங்கை வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ரிஸ்ஹசன் தெரிவித்துள்ளார். ஈராக்கின் புனர்நிர்மாணத்துக்கு இலங்கை உதவியாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கத் தாக்குதலுக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தட்டிவான் மோதியதில் சிறுமி ஸ்தலத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

ஆலயத்திற்குச் சென்றுகொண்டிருந்த சிறுமி, எதிரேவந்த தட்டிவானுடன் மோதி விபத்துக்குள்ளாகி மரணமடைந்தார்.

நேற்றுமாலை 3 மணியளவில், வரணி, கறுக்காய்ப்பகுதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், இதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை விஜயலலிதா (வயது 13) என்ற சிறுமியே மரணமடைந்தார்.

வீதியைக் கடக்க முற்பட்ட வேளை- தட்டிவானுடன் மோதியதில் படுகாயமடைந்த இச்சிறுமி, மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் மரணமடைந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் நடைபெற்றதையடுத்து வானை நிறுத்திவிட்டு சாரதி தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச,15,13,)

## பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் மேலும் ஒரு சீனரின் சடலம் ஒதுங்கியது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட, சீன மீன்பிடிப்படகிலிருந்து காணாமற்போன மேலும் ஒருவரின் சடலம் நேற்று பருத்தித்துறை கடற்பரப்பில் கரையொதுங்கியது.

கரையொதுங்கிய மேற்படி சடலம் தொடர்பாக, அப்பகுதி மீனவர்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து அந்தப்பகுதிக்குச் சென்ற பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தினை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும், இந்தச் சடலம் தொடர்பாக சீனத் தூதரகத்திற்குத் தெரிவித்து சடலத்தைக் கையேற்கச்செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்குப் பணித்தார்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன மீன்பிடிப் படகு மூழ்கடித்த சம்பவத்தையடுத்து, கடந்தவாரம் வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதியில் ஏழு சடலங்கள் கரையொதுங்கின. நேற்றையதினம் கரையொதுங்கிய சடலத்துடன் சடலங்களின் தொகை எட்டாக அதிகரித்துள்ளது.

(ச,13)

## வடமராட்சி கிழக்கில் மீண்டும் இந்திய மீன்பிடி ட்ரோலர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் மீண்டும் இந்திய ட்ரோலர்கள் வருகை அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் மன்னார்க் கடலில் வைத்து மீனவர்களினால் இந்திய ட்ரோலர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டதை அடுத்து, இந்திய ட்ரோலர்களின் வருகை குறைந்து காணப்பட்டது. ஆனால், நேற்றுமுன்தினம் இரவு 16 ட்ரோலர்கள் வடமராட்சிக் கடலிலே அத்துமீறி நுழைந்துள்ளன.

இதனால், வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 16 மீனவர்களது வலைகள் யாவும் வெட்டப்பட்டுள்ளதாகவும், மீனவர்களுக்கு இதனால் பல ஆயிரம் ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக அதிகாலையில் கரைக்குத் திரும்பிவிடும் மீனவர்கள், அன்றைய தினம் மதியமே கரை திரும்பியதாக வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.



அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளின் தாக்குதலால் பஸ்ரா நகரைவிட்டு பெருந்தெரு வழியே தப்பியோடும் ஈராக்கியக் குடும்பம் ஒன்று.

SCANDIA AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019

(சி-626) 01-505632, 074-612656, 01-390128

# தமிழ்மக்கள் அனுபவிக்கும் உரிமை முஸ்லிம் மக்களுக்கும் வழங்குவோம்!

## மட்டு. - அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ் உறுதி

(மட்டக்களப்பு)

எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் எவ்வளவு உரிமைகளை அனுபவிக்கின்றார்களோ, அந்தளவு உரிமைகளை முஸ்லிம்களும் பெற்றுவாழ்வார்களென நாம் உறுதி கூறுகின்றோம்.

- இவ்வாறு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவுடன் நடாத்திய பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது, தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையே எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. இரண்டு சமூகங்களும் நல்ல உறவு நிலையையே பேணிவருகின்றன.

எமது பகுதியிலுள்ள முஸ்லிம் மக்களின் வயல்களில் விவசாயத்தை மேற்கொள்வதற்கு, அவர்கள் எம்மிடம் அனுமதி கேட்கவேண்டிய அவசியமோ, நாம் அனுமதி கொடுக்க வேண்டிய அவசியமோ இல்லை.

யுத்தத்தால்தான் இந்த வயல்களில் முஸ்லிம் மக்கள் விவசாயம் செய்ய முடியாதநிலை இருந்தது. இப்போது அமைதிச் சூழலில் அவர்கள் தாராளமாக விவசாயம் செய்யலாம் என்றார்.



ரமேஷ்

இச்சந்திப்புப் பற்றிக் குறிப்பிட்ட - முஸ்லிம் காங்கிரஸ் தரப்புப் பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிய பசீர் சேகுதாவூத்,

விடுதலைப் புலிகளுடனான சந்திப்பு மிக இணக்கபூர்வமாக, நல்லதொரு நட்பார்ந்த சூழலில் நடந்ததாகத் தெரிவித்தார்.

இருதரப்பும் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள், முஸ்லிம் தரப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அடங்கிய முத்தரப்பினர் இன்றுமுதல் தொடர்ந்து மூன்று நாட்கள் - பெண்டுகள்சேனை, கரடியனாறு, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான வயற்காணிகளை இனங்காணவுள்ளனர்.

முஸ்லிம் மக்கள் மீள விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவகாரம், சட்டரீதியானதாக இருப்பதற்காக, அது மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளது.



புலிகளின் முஸ்லிம் மக்களுடனான சந்திப்பில் கலந்துகொண்ட கண் காணிப்புக்குழுப் பிரதிநிதியும் மட்டு. அரச அதிபரும்.

# மன்னார் வீதியில் படையினர் பயிற்சி

## மக்கள் மத்தியில் அச்சம்

(மன்னார்)

மன்னார் பகுதியில் இராணுவத்தினர் தாக்குதல் ஒத்திகைப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

வரைபடங்களின் உதவியுடன் படைநகர்வுகளை மேற்கொள்வது, இலக்குகளைக் கண்டறிந்து தாக்குதல் நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தாக்குதல் ஒத்திகைகளில் படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

மன்னார் பிரதான வீதியிலேயே இந்தப் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

படையினரின் இந்தப் பயிற்சி நடவடிக்கைகளால், மன்னார் பகுதியில் வாழும் மக்கள் பெரிதும் அச்சமடைந்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (3)

### வீதி ஒழுங்கு பாதுகாப்புச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் - கிளிநொச்சி கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும் வீதி ஒழுங்கு பாதுகாப்புச் செயலமர்வு - கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறுமென கிளிநொச்சி கல்விப் பணிமனையின் முறை சாராக்கல்விப் பிரிவினர் தெரிவித்தனர். (108)


# கேள்வி அறிவித்தல்

## கட்டடங்கள் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.

01. வடக்கு - கிழக்கு மாகாணக் கட்டடங்கள் திணைக்களக் கேள்விச்சபைத் தலைவரினால் கோப்பாய் சுற்றியற் கூறில் காசநோயாளருக்கான தனிப்பட்ட வாட்டை பூர்த்தி செய்வதற்கான கேள்விகள் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிவரை இத்திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம். 7 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750 ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம், அத்துடன் ஏதும் மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*பணிப்பாளர் அலுவலகம்,*
*கட்டடங்கள் திணைக்களம்,*
*வடக்கு - கிழக்கு மாகாணம்,*
*உட்துறைமுகவீதி,*
*திருகோணமலை.*
*திகதி:27.03.2003*

**எந்திரி. அ. வேல்மாணிக்கம்,**
**தலைவர்,**
**திணைக்கள கேள்விச்சபை,**

(சி-723)


# கர்த்தருக்குள் நித்திரையடைந்து
# மூன்றாம் ஆண்டு நிறைவு

பிறப்பு 10 - 08 - 1925



இறப்பு 29 - 03 - 2000

## மத்தியாஸ் யோசேப்பு

**அன்பினால் எம்மை ஆண்ட எம் அன்புத் தெய்வமே - என்றும் எம் நெஞ்சினில் நிறைந்திருக்கும் உமது நினைவுகள்!**

*மருதங்கேணி,*
*தாளையடி.*

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

(295)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

SPOKEN ENGLISH WITH GRAMMER
**N.VIGNESWARAN ARCHERY**
BLACK ROAD, CHANKANAI,
426 (302) K.K.S ROAD.
JAFFNA.

(சி-664)

**ராஜா** யாழ்ப்பாணம்.

விஜய், ரீமாசென், வடிவேல் நடித்த



**பகவதி**

10.30, 2.30, 6.30, 9.30

(சி-628)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த

**மாயி**

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

**HOLLOW MAN**

(சி-627)

# எக்ஸ்போ ஏவியேஷன்



**இல. IE, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே. - 021-2223891, 071-348888, 071-349999, 0777-730666**

*காலைநேர விமான சேவை*

| கிழமை | புறப்படல் இரத்மலானை | வந்தடைதல் பலாலி | புறப்படல் பலாலி | சென்றடைதல் இரத்மலானை |
|---|---|---|---|---|
| திங்கள், செவ்வாய், புதன் | 06.30 | 07.30 | 08.15 | 09.15 |
| வெள்ளி | 10.45 | 11.45 | 12.30 | 13.30 |
| சனி | 08.15 | 09.15 | 10.00 | 11.00 |

*மாலைநேர விமான சேவை*

| | | | | |
|---|---|---|---|---|
| செவ்வாய் | 12.45 | 13.45 | 14.30 | 15.30 |
| வெள்ளி, சனி | 16.00 | 17.00 | 17.45 | 18.45 |
| ஞாயிறு | 14.00 | 15.00 | 15.45 | 16.45 |

குறிப்பு:- புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தமது மீள் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

☆ குளிரூட்டப்பட்ட இலவச போக்குவரத்து

**யாழ். - பலாலி - யாழ்.**
**கொட்டாஞ்சேனை - இரத்மலானை - கொட்டாஞ்சேனை**

☆ வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும், உள்நாட்டுப் பிரஜைகளுக்கும் ஒரே வகையான கட்டணமே அறவிடப்படுகிறது.

ஒருவழி - 2425/-

இருவழி - 4550/-

(சி-720)


# இன்றைய நாள் இனிய நாள்

## 29-03-2003 - சனிக்கிழமை

**மேடம்** :- வாக்கு வசீகரம், லட்சுமிகரம், குடும்ப சுகம், தொழில் குறைவு, காரிய விக்கினம்.

**இடபம்** :- சந்தோஷ மிகுதி, வாகன நன்மை, புதிய ஸ்தானம், உறவினர் நண்பர்களால் நன்மை.

**மிதுனம்** :- இல்லறச் சிறப்பு, காரிய சித்தி, ஐஸ்வரிய பேறு, தொழிற் சிறப்பு, களஸ்திர சுகம்.

**கர்க்கடகம்** :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, நிலை மாற்றம், வீண்பழி கேட்டல், வீண் பிரயாசை.

**சிங்கம்** :- பணவரவு, சத்துரு வெற்றி, களஸ்திர மகிழ்ச்சி, வீண் பயம், நற்குண விருத்தி.

**கன்னி** :- காரியசித்தி, ரோகநித்தம், பெரியோர் மதிப்பு, தொழில் விருத்தி, ஊக்கமிகுதி.

**பிரபல சோதிடர் எஸ். குகநேசன்**

**துலாம்** :- காரிய வெற்றி, சத்துரு வெற்றி, பெரியோர் ஆதரவு, சரீர பலக் குறைவு.

**விருச்சிகம்** :- லட்சுமிகரம் புதிய ஸ்தானம், சந்தோஷம், பகைவர் தொல்லை, சுகக் குறைவு.

**தனு** :- புத்திர சுகம், தாரசுக தடை, இரத்த காயம், தொழில் கேடு, தன லாபம்.

**மகரம்** :- புதிய சிநேகிதம், மனமகிழ்ச்சி, சத்துரு வெற்றி, காரிய அனுகூலம், தனவிருத்தி.

**கும்பம்** :- குடும்ப மகிழ்ச்சி, நேத்திரரோகம், பணவரவு, தனலாபம், ஆயுத பீடை,

**மீனம்** :- வாக்கு கலகம், பிரயாண கஷ்டம், புத்தி தடுமாற்றம், பணக் குறைவு.

# வட-கிழக்கு தேவை மதிப்பீட்டு அறிக்கை; ஜப்பான் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்

## சிறான் பணிப்பாளர் செல்வின் அறிவிப்பு

எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி ஜப்பானின் ரோக்கியோ நகரத்தில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் உதவிகளைப் பெறுவதற்காக வடக்கு-கிழக்கிற்கான தேவைகளை இனங்கண்டு, அவை தொடர்பான உரிய ஆவணங்களை சிறிலங்கா அரசும் - விடுதலைப்புலிகளும் இணைந்து சமர்ப்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கான சர்வதேச நிபுணத்துவத்தை - ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் யுனிசெப், யு.என்.டி.பி. என்பன இணைந்து செயற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தின் பேரில் மேற்படி நிறுவனங்கள் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

- இவ்வாறு சிறான் செயலகப் பணிப்பாளர் செல்வின் இரனியேஸ் கிளிநொச்சியில் இடம்பெற்ற செயலமர்வு தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு - கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களுக்கும் சென்று, வெளிநாட்டு வள அணியினரையும், உள்ளூர் வள அணியினரையும் இணைத்து கடந்த ஒருமாதமாக மேற்படி பகுதிகளில் எத்தகைய தேவைகள் உள்ளன என்பதை இனங்கண்டு, அடுத்த ஐந்து தொடக்கம் ஏழு வருடங்களில் பூர்த்தி செய்யப்படவேண்டிய தேவைகள் என்பவை கணிப்பீடு செய்யப்படவுள்ளது.

அதை இறுதி வடிவமாகத் தயாரித்துச் சம்பந்தப்பட்டவர்கள் - மக்கள், அரச உத்தியோகத்தர்கள் போன்ற பல்வேறுபட்டவர்களுக்கு நாம் கண்டறிந்த பிரச்சினைகளைத் தெரியப்படுததி, இது சம்பந்தமாக அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்துள்ளோம்.

அதற்கமைவாக அவர்களின் கருத்துக்களில் - எக்கருத்துககளைப் புதிதாக இணைக்கவேண்டும், எக்கருத்துக்களை மாற்றவேண்டும் எனவும், எதனை முதன்மைப்படுத்த வேண்டும் என நாம் ஒரு மதிப்பீட்டு செயற்பட்டறையை நடத்தினோம். இதில் நாம் கண்டறிந்த விடங்களைத் துறைசார்ந்த பதினொருதுறைகளாக வகைப்படுத்தி - பதினொரு செயன்முறை அமர்வுகளாக வட்டக்கச்சியில் அமைந்துள்ள தாயகக் கோவைத் திட்டமிடல் பணிமனை செயலகத்தில் மதிப்பீட்டறிக்கை தயாரிப்பு இடம்பெற்றது. இத்தகைய பதினொருபிரிவிற்கும் - மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம், சர்வதேச நிறுவனங்களின் பிரிவுகள், அரச அதிபர்கள், மாவட்ட உத்தியோகத்தர்கள், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவர்களின் மேற்படி கருத்துக்களில் - தாம் கண்டறிந்த விடயங்களைத் தெரிவித்தனர். இச்செயற்பாட்டின் மூலம் அவர்கள் கண்டறிந்த விடயங்களை மாற்றியமைக்க முடிந்ததுடன், தவிர்க்கப்பட்ட முக்கிய விடயங்களை மீள இணைக்கக்கூடியதாகவும் அமைந்தது. முன்னுரிமை கொடுக்கப்பட்ட தேவையற்ற விடங்களை நீக்கக்கூடியதாகவும் அமைந்தது.

அதன்படி முதலாவது மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பு - கடந்த 22 ஆம் திகதி நிறைவுபெற்றது.

அடுத்த கட்டமாகக் கலந்துபேசிய அனைத்து விடயங்களையும் ஒன்று சேர்த்து, ஒரு ஆவணமாகத் திருப்பித் தயாரிக்கவேண்டும். இவ்வாவணங்கள் ஏப்ரல் 10 ஆம் திகதியளவில் முழுமையான நிலையை அடையும்.

இவ்வாவணமானது, வட-கிழக்கின் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை படுத்தப்படும். கிடைக்கப்படும் பணத்தை வைத்து வட-கிழக்கின் தேவையினை நிவர்த்திசெய்யலாம்.

இவ்வாவணமானது, இரு தரப்பிடமும் கையளிக்கப்பட்டு, ஒரு உத்தரவாதம் வழங்கப்படும். பின்னர் ரோக்கியோவில் - உதவி வழங்கும் நாடுகளில் வைத்து, உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும். உதவி வழங்கும் நாடுகள் இவற்றைப் பரிசீலித்து எத்தகைய வேலைத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கமுடியும் என உலகநாடுகள் தீர்மானிக்கும். இந்நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான ஆரம்ப வேலைத்திட்டங்கள் இப்போது நடைபெற்று வருகின்றன.

இங்குள்ள மக்கள் அல்லது இவைசார்ந்த உத்தியோகத்தர், விடுதலைப்புலிகளின் துறைசார்ந்தவர்களின் குரல் சரியானமுறையில் ஒலிக்கப்படவேண்டும் என்பதற்காகவே இங்கு அழைக்கப்பட்டனர். அடுத்து இரண்டு அல்லது மூன்று நாட்களில் மீளெழுதுதல் வேலைகளின் இக்கருத்துக்கள் மிகவும் நல்ல முறையில் பிரசுரிக்கப்பட இருக்கின்றன எனவும் சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் தெரிவித்தார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### இலங்கை வங்கியில் சைக்கிள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் - வாடிக்கையாளர் ஒருவர் சைக்கிள் ஒன்றை மாறி எடுத்துச் சென்றுள்ளார். இலங்கை வங்கியில் ஒரு லுமாலா சைக்கிள் அநாதரவானநிலையில் உள்ளதாகவும், சைக்கிளை மாற்றி எடுத்தவர் தொடர்பு கொள்ளுமாறும் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் கேட்டுள்ளார்.

### பிரதேசசபைத் தலைவர் கொலைக்கும் ஜே.வி.பிக்கும் தொடர்பு

(கொழும்பு)

ஹிக்கடுவப் பிரதேசசபையின் தலைவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கும் - ஜே.வி.பிக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளதாக இக்கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட பிரதேசசபைத் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

# புலிகளே ஏகபிரதிநிதிகள் எனக்கூறி தேர்தலில் வென்றவர் ஆனந்தசங்கரி

## வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

(வவுனியா)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆனந்தசங்கரி - விடுதலைப் புலிகள் தொடர்பாக அண்மையில் தெரிவித்த கருத்தினைக் கண்டித்து வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆனந்தசங்கரி அண்மையில் தெரிவித்த கருத்தானது, அவரது தனிப்பட்ட கருத்தா அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தா என்பதனைக் கட்சி மிகவிரைவில் வெளியிடவேண்டும்.

ஏனெனில், தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் எனத் தமிழ்மக்களும், சர்வதேச உலகமும் மற்றும் இலங்கை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ள இந்நிலையில், ஆனந்தசங்கரி - தமிழீழ விடுதலைப்புலிகள் - தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அல்ல என்று கூறியது கண்டிக்கப்படவேண்டியது.

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வாசகத்துடனே தமிழ்க் கூட்டமைப்பு தேர்தல்களில் போட்டியிட்டது. இதனாலேயே பொதுத்தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பால் வெற்றிபெற முடிந்தது. இவ்வாறு போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களில் ஆனந்தசங்கரியும் ஒருவர் என்பதை அவர் நினைவில் வைத்திருக்க வேண்டும். அத்துடன், தமிழர் தாயகப் பிரதேசங்களிலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வுகளின்போது, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் - தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்பதே எல்லோராலும் வலியுறுத்தப்பட்டது என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் ஆனந்தசங்கரிக்கும், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கும், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(3)



மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நிறுவப்பட்ட புதிய கணினி மய நூல்நிலையத் திறப்பு விழாவில் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் கல்லூரி அதிபர் கு.சண்முகநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மத்துகமவில் விமான நிலையம் அமைப்பதற்குத் துரித ஏற்பாடு!

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தகவல்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலைய விஸ்தரிப்புக்குப் பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால், மத்துகமவில் சர்வதேச விமான நிலையம் ஒன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டம்- மத்துகமவில் துரிதமாக விமான நிலை யத்தை நிறுவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மத்துகமவில் விமானநிலையம் அமைக்கப்பட்டால், தென்பகுதியை அபிவிருத்தி செய்யமுடியும் என்றும், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அமைச்சர் மகிந்தசமரசிங்க மேலும் தெரிவித்தார்.

# A - 9 வீதியில் படையினர் சென்றுவர வாய்ப்பிருந்தும் பயன்படுத்துவதில்லை

## கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ரொகில்சன்

புரிந்துணர்வு உடன்பாட்டின்படி ஏ-9 வீதியூடாகப் படையினர் பயணஞ்செய்யக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் - அதனைப் பயன்படுத்துவதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையென்பதை விடுதலைப்புலிகள் தெளிவாக்கியிருப்பதாகவும் - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொகில்சன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறும்போது -

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி - அடுத்து வரும் ஏப்ரல் மாதம் எட்டாம் திகதியிலிருந்து ஆயுதம் தாங்கிய பொலிஸாரோ, இராணுவத்தினரோ, ஏனைய படையினரோ ஏ-9 வீதியில் சென்றுவர இடமிருக்கிறது. ஆனால், இது அரசதரப்பால் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றார்.

இதேவேளை, ஏ-9 வீதியூடாகப் படையினர் சென்றுவரும்போது, சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் கூட - அது பெரும் குழப்பத்திற்கு வழி வகுத்துவிடும் என்று படைத்தரப்பில் கண்காணிப்புக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது இவ்வாறிருக்க, தற்போது விமானப்படை விமானங்களால் யாழ்ப்பாணம் - கொழும்புப் பாதையில் ஆயிரம் படையினரைக் கொண்டு செல்லவே வசதிகள் இருப்பதாகவும், இது போதுமானதல்ல என்றும் விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்த நெருக்கடியைச் சமாளிக்க கடற்படை, 700 துருப்புக்களை ஒரே நேரத்தில் கொண்டு செல்லக்கூடிய கப்பலொன்றைக் கொள்வனவு செய்யும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளது.

இதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டிருப்பதாகவும் கடற்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### சென்.ஜோன்ஸ் அங்கத்தவர்களுக்கு மலேசியாவில் பயிற்சி

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கு மலேசியா - கோலாலம்பூரியில் உயர்தர முதலுதவிப்பயிற்சி, பொதுக்கடமை, நோயாளரைக் கையாளும்முறை, அழிவுகளுக்கு முகம்கொடுத்தல் போன்ற பயிற்சிகள் 10 நாட்கள் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பத்தை சென்.ஜோன்ஸ் அமபுலன்ஸ் தேசிய தலைமையகம் அந்தந்த மாவட்டங்கள் ஊடாகக் கோரியுள்ளது.

## மகரகமவில்

# மயக்கமடைய வைத்து நிர்வாண புகைப்படம் எடுத்த வைத்தியர்!

(கொழும்பு)

பெண் ஒருவரை மயக்கமடையச் செய்து நிர்வாணமாகப் புகைப்படம் எடுத்த வைத்தியர் ஒருவரையும் இரு புகைப்படக்காரர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர். மகரகமவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது

மருத்துவ பரிசோதனைக்குச் சென்ற பெண்ணொருவரை சஞ்சிகை ஒன்றில் பிரசுரிப்பதற்காக படம் எடுக்கவேண்டும் என வைத்தியர் கேட்டுள்ளார். பெண்ணும் சம்மதிக்கவே சாதாரண உடையில் புகைப்படம் எடுக்கப்பட்டது.

பின்னர்- பெண்ணுக்குத் தெரியாமல் அவருக்கு மயக்கமருந்து கொடுத்து நிர்வாணமாக புகைப்படம் எடுத்துள்ளனர். இதுகுறித்து முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மேற்படி வைத்தியரையும் இரு புகைப்படப்பிடிப்பாளர்களையும் தேடிவருகின்றனர்.

## உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## (வடக்கு - கிழக்கு மாகாணசபை)

# வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல.1846 - SRI (SF)

# கேள்வி அறிவித்தல்

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | கிளி/நிகொட்/ஈடி/06 | பளை றோ.க.த.க.பாடசாலையில் 110'X 25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடமும் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்த 80'X 25' கட்டிடமும் நிர்மாணம். | 1,000 | எம் 6 | 53,000 |
| 02 | கிளி/நிகொட்/ஈடி/07 | புன்னைநீராவி அ.த.க. பாடசாலையில் 110'X25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடமும் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X 25' கட்டிடமும் நிர்மாணம். | 1,000 | எம் 6 | 53,000 |
| 03 | கிளி/நிகொட்/ஈடி/08 | கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 110'X25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடமும் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X 25' கட்டிடமும் நிர்மாணம். | 1,000 | எம் 6 | 53,000 |
| 04 | கிளி/நிகொட்/ஈடி/09 | பளை மத்திய கல்லூரியில் இரண்டு 120'X25' வகுப்பறைக் கட்டிடங்களும் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X 25' கட்டிடமும் நிர்மாணம். | 1,000 | எம் 6 | 52,000 |
| 05 | கிளி/நிகொட்/ஈடி/10 | கிளிநொச்சி/ புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலையில் 110'X 25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடமும் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X 25' கட்டிடமும் நிர்மாணம். | 1,000 | எம் 6 | 53,000 |
| 06 | கிளி/நிகொட்/ஈடி/11 | பிரமன்தனாறு மகா வித்தியாலயத்தில் 110'X 25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடமும் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X 25' கட்டிடமும் நிர்மாணம். | 1,000 | எம் 6 | 53,000 |
| 07 | கிளி/நிகொட்/ஈடி/12 | பூநகரி மகா வித்தியாலயத்தில் 110'X 25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடமும் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X 25' கட்டிடமும் நிர்மாணம். | 1,000 | எம் 6 | 53,000 |
| 08 | கிளி/நிகொட்/ஈடி/13 | பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தில் 110'X 25' இருமாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடமும் செயற்பாட்டறையும் விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைந்த 80'X 25' கட்டிடமும் நிர்மாணம். | 1,000 | எம் 6 | 53,000 |
| 09 | கிளி/நிகொட்/ஆர்டி/03 | வன்னேரிக்குளம் - பண்டிவெட்டி பால நிர்மாணம். | 1,000 | எம் 7 | 40,000 |
| 10 | கிளி/நிகொட்/ஏஜி/01 | பளை கமநல கேந்திர நிலைய மீள்நிர்மாணம். | 1,000 | எம் 7 | 35,000 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.
I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர், பதிவு, தரவுபடுத்தல், திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.
II. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும்.
இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.
III. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
IV. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
V. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்ததாரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

04. மேற்படி பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்து கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றிற்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்தவிடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப் படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களை 2003 மார்ச்சு 31ந் திகதியிலிருந்து ஏப்ரல் 11 ஆந் திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறிந்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர் கருத்திட்ட கேள்விச்சபை மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2003 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்வி கள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று ஏப்ரல் 09 ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**தி.இராசநாயகம்**
**தலைவர், மாவட்ட கேள்விச் சபை,**
**அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.**

(சி- 724)

# வார்த்தை விளையாட்டு - 26

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | | 2 | | | |
| | 3 | | தி | 4 | |
| | | 5 | | ச | |
| | 6 | | | 7 | னி |
| | ந் | | 8 | | |
| 9 | | | ம் | | 10 உ |

முழுப் பெயர் : ......................................

கற்கும் பாடசாலை : ......................................

கற்கும் தரம் : ......................................

முகவரி : ......................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

## இடமிருந்து வலம்

1. திருமணம்
3. செய்தித்தாள்
5. இறந்தோருக்கு வருடம் தோறும் நிறைவேற்றும் சடங்கு
6. மானைப் போன்ற விலங்கு
7. குளிருக்குக் காரணமானது, மழைபோலவும் பொழியும்.
8. சமையலறை உபகரணம்.
9. நண்பகல்



## மேலிருந்து கீழ்

1. அவுஸ்திரேலியாவின் தேசிய விலங்கு
2. பயணம்
4. ஒரு இராசி
6. குரங்கு இனத்தைச் சேர்ந்தது
10. நெல்லின் கழிவு

## வார்த்தை விளையாட்டு - 25 இன் விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. ஆழம் | 1. ஆலயம் |
| 2. சிகை | 3. கண்டிப்பு |
| 3. கம்பன் | 4. பட்டு |
| 5. ஆண்டு | 5. ஆடவன் |
| 7. உவப்பு | 6. வெண்மை |
| 9. அன்பு | 8. ஆமை |

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 02-04-2003
சரியான விடை எழுதிய மூவர்ர குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 25

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
**சுகனியா கருணாகரன்**
இல.6, குரசோ வீதி,
யாழ்ப்பாணம்.

*2 ஆம் பரிசு -*
**கி.க்பிலன்**
9/1 1ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை.

*3 ஆம் பரிசு -*
**த.பவித்திரா**
கைதடி வடக்கு, கைதடி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## இரண்டு பானைகள்!

இணுவிலுக்குப் பக்கத்தில் ஒரு கிராமம். ஒரு விவசாயி, தன் நிலத்தை உழுதுகொண்டிருந்தார். அப்போது அவருடைய கலப்பை எதிலோ மோதி நின்றது. புதையலோ, என்னவோ என்று நினைத்த விவசாயி- ஊர்க்காரர்களிடம் விஷயத்தைச் சொன்னார். பத்துப் பதினைந்து பேராகச் சேர்ந்து தோண்டிப் பார்த்தார்கள்.



பல நூறு வருடங்களுக்கு முன்பு, அங்கிருந்து ஒரு சிற்றூர் காலப்போக்கில் மண்ணுக்குள் புதையுண்டு விட்டதுபோல இடிந்த சுவர்களும், பாத்திர பண்டங்களுமாக நிறையக் கிடந்தன.

ஒரு மண்பானை எல்லோரையும் கவர்ந்தது. அதன் வெளிப் புறத்தில் காளை மாட்டின் படமும், ஒரு மரத்தின் படமும் வரையப்பட்டு அழகாக இருந் தது அது.

ஊர்த்தலைவர் அதைக் கையில் எடுத்து ஆசையாகப் பார்த்தார். அப்போது மண்பானை பேசத் தொடங்கியது. "ஐயா, இன்னும் தோண்டிப் பாருங்கள், என் நண்பனாகிய இரும்புப்பானை கிடைப்பான்" என்றது அது.

ஆச்சரியத்தோடு தோண்டினார்கள். துருப்பிடித்த ஓரிரு இரும்புத் துண்டுகள்தான் கிடைத்தன.

"இரும்பு, காலப்போக்கில் துருப்பிடிச்சு, துண்டு துண்டாப் போய்விட்டது..." என்று சொன்னார் ஊர்த் தலைவர்.

மிகவும் வருத்தப்பட்டது மண்பானை.

"ஏன் குறிப்பா இந்த இரும்புப் பானையை எடுக்கச் சொன்னாய்?" என்று கேட்டார் ஊர்த்தலைவர்.

"ரொம்ப காலத்துக்கு முன்னால, இந்த இரும்புப் பானை பல்மா இருந்தது, என்மேல இருக்கிற மாதிரி படம் எதுவும் அந்தப் பானை மேல் இல்லை. அதனால் அதுக்குப் பொறாமையோ என்னவோ... என்னைக் கிண்டல் செய்துகொண்டே இருக்கும். 'நான்தான் பலசாலி, யாராவது தட்டிவிட்டாக் கூட நீ உடைஞ்சு போய்விடுவாய்" என்று சொல்லிக்கொண்டே இருக்கும்" என்றது மண்பானை. "பாத்தியா... கடைசியில் அது இத்துப் போய்விட்டது. ஆனால் நீ உடையாம இருக்கிறாய்!" என்று ஆச்சரியப்பட்டனர் ஊர் மக்கள்.



# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
ச. நிதர்சனா
கற்கும் பாடசாலை :-
வைத்தீஸ்வராக் கல்லூரி.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், நடனம், விஞ்ஞானம்.



முழுப்பெயர் :- தி.பிரசாந்
கற்கும் பாடசாலை :-
வேலணை மேற்கு நடராஜா மகாவித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை, கலைத்துறை (பாட்டு).



முழுப்பெயர் :-
வ.பிரகாஷ்
கற்கும் பாடசாலை :-
அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :
ரீ.வி பார்த்தல், பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



முழுப்பெயர் :-
பி.யூடித்ரேகா
கற்கும் பாடசாலை :-
திருக்குடும்ப கன்னியர்மடம்.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, விளையாட்டுத் துறை.

முழுப்பெயர்:- சு.தயாநிதி
கற்கும் பாடசாலை :-
வவுனியா/இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 04
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், இசை, கல்வி, பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:- த.அகர்சனன்
கற்கும் பாடசாலை :-
இந்து ஆரம்பப் பாடசாலை
கற்கும் தரம் :- 05
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல், விளையாட்டுத்துறை.

முழுப்பெயர்:- இ.ராஜீ
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக்கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கவிதை எழுதுதல்.

முழுப்பெயர்:- ப.ராதிகா
கற்கும் பாடசாலை :-
வேலணை மத்திய கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், விளையாட்டு, கதை வாசித்தல்.

# உங்கள் கைவண்ணம்



ஜெ.பிரகதீஸ்,
தரம் - 8
யாழ். ஹாட்லிக் கல்லூரி.



க. திவியா
தரம் - 11
யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி , கரவெட்டி.

# விடுகதைகளும்



1. அள்ளுவான் தின்னமாட்டான் அவன் யார்?
2. ஆயிரம் பேர் சேர்ந்து கட்டிய வீடு- ஒருவன் கண்பட்டு உடைந்தது. அது என்ன?
3. பச்சை வீட்டிற்குச் சிவப்புக் கதவு. அது என்ன?
4. ஐந்து வீட்டுக்கு ஒருமுற்றம். அது என்ன?
5. காய்ப்பார் பூப்பார் கலகலப்பார் காகம் இருக்கக் கொப்பில்லை அது என்ன?

1.அகப்பை
2தேன்கூடு
3.கிளி
4.உள்ளங்கை
5.நெல்

வி.நிருபன்
தரம் 3
விக்னேஸ்வராக் கல்லூரி

# விடைகளும்



1. ஒரு கூட்டுக்குள் இரு தைலங்கள். அது என்ன?
2. போகும் இடம் தெரியும் ஆனால், போய்ச் சேரும் இடம் தெரியாது. அது என்ன?
3. அள்ளுவான் கிள்ளுவான். ஆனால், தான் உண்ணமாட்டான். அது என்ன?
4. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான். அது என்ன?
5. செம்பு நிறைய சிவப்பு நிற முத்துக்கள். அது என்ன?

1. முட்டை
2. புகை
3. அகப்பை
4. இளநீர்
5. மாதுளம்பழம்

சி.அசோக்கமாலினி
தரம் - 10.
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

## எண் வித்தை

| | | | |
|---|---|---|---|
| 91 | 6 | 84 | 63 |
| 83 | 64 | 86 | 11 |
| 56 | 81 | 13 | 94 |
| 14 | 93 | 61 | 76 |

இந்தச் சதுரத்தில் உள்ள எண்களை எப்பக்கத்தில் கூட்டினாலும் ஒரே விடை வருவதைக் காண்பீர்கள்.

பா.மேகலதன்,
தரம் - 10,
கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்,
காரைநகர்.

# My School

The name of my school is J/ Hartley - College. It is at Point- Pedro. It is one of the leading school in Srilanka. There are classes from year - 6 to year - 13. Nearly 1250 students study at my school. There are forty teachers on the school staff. There is a library in my school. There are four up stairs buildings in my school. My school has a modern science laboratory and computer room. Every year our school gets good results in G.C.E. (O/L) and G.C.E (A/L). My Principal maintains high discipline our school. I am proud my school.

*by: Thiyagaraja Kirupagaran*
*Hartley - college*
*G.C.E. O/L (2002)*

# வளமாய் நாமும் மாறுவோம்

பாலர் நாங்கள் கூடியே
ஆடிப்பாடி மகிழுவோம்
நீளும் பொழுதில் நாங்களும்
வாழும் கலைகள் பயிலுவோம்

தெய்வமோடு எங்களின் தாய்தந்தையவருடன்
குருவை போற்றும் பண்புடன்
வாழும் போதில் பெருமையும், கூடி
நாமும் சிறப்புடன் தேடுவோமே சிறப்பினை



நல்ல பண்பு கொண்டவர்
நாங்கள் என்று சொல்லியே
நாடும் வீடும் போற்றவே
நலமாய் வாழ்வோம் மண்ணிலே

தேசம் வீடும் என்பதும்
நமக்கு ரண்டு கண்கள் தான்
போற்றியதனை வளர்க்கவே
வளமாய் நாமும் மாறுவோம்.

ஆக்கம்:
நல்லை நகர் -
தி. ஜெயராஜ்.

# 'கல்' லில் சில வினாக்கள்

ஆந்தை தூங்கும் கல் எது?
பகல்
உண்மையான கல் எது?
நகல்
கேலி செய்யும் கல் எது?
நக்கல்
மனிதர்களுக்கு வரும் கல் எது?
விக்கல்
மனிதர்களை மாட்டிவிடும் கல் எது?
சிக்கல்
பழுதடைந்த கண்களுக்கு விளங்கும் கல் எது?
மங்கல்
இந்து சமயத்தவர்கள் கொண்டாடும் கல் எது?
பொங்கல்

அ. வீபூஷணன்
தரம் - 5,
யாழ். கொ. இ. ஆ. பாடசாலை.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

.................. திகதி .................. ஒப்பம்

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்

*திருக்குறள்*

# நமது நோக்கு

## இடைவிலகுவோரிலும் கவனம் குவிப்போம்...!

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம் - யாழ்.மாவட்டத்தில் தொழிலற்று இருப்போரின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வீதத்தில் வளர்ச்சிப்போக்கில் காணப்படுவதாக தகவலொன்று வெளியாகியுள்ளது.

இதில் - பாடசாலைக் கல்வி, உயர்கல்வி, பல்கலைக்கழகம் என சகல கல்வித்தரங்களையும் கொண்டோர் உள்ளடங்குகின்றனர்.

இந்த ஆய்வின் பிரகாரம் - பல்கலைக்கழகக் கல்வியைப் பூர்த்தி செய்தோர் - அதிலும் குறிப்பாக, கடந்த ஐந்து, ஆறு வருடங்களில் பட்டப்படிப்பை முடித்தோர்- வேலையற்றோர் பட்டியலில் கணிசமான எண்ணிக்கையில் இருப்பது வெளித்தெரியவந்துள்ளது.

இவர்களோடு உயர்கல்வியைப் பூர்த்தி செய்தோரும் - பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதி பெறாதோருமென இன்னுமொரு கணிசமான எண்ணிக்கையினரும் உள்ளனர்.

அதேவேளை - இந்த இரண்டு தொகுதிகளையும் விட பாடசாலைக் கல்வியைத் தமது தகுதி நிலையாகக் கொண்டுள்ள ஏராளமானோர் தொழில் வாய்ப்பின்றி இருப்பது - யாழ்.குடாநாட்டின் மனிதவலுவை பொறுத்தளவில் கவனம் ஈர்க்கும் விடயமாகவே கருதப்படுகின்றது.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்தோரும், உயர்தரத்தகுதி உடையோரும் தமக்கு இன்றில்லாவிட்டாலும் - போட்டிப் பரீட்சைகள் மூலமோ, வேறு வழிகளிலோ வேலை வாய்ப்புக்களைத் தேடிக்கொள்ளும் எதிர்காலம் இருப்பதாக நம்பிக்கை கொண்டுள்ளவேளை-

பாடசாலைக் கல்வியோடு நிறுத்திக் கொண்டவர்களின் எதிர்காலம் அல்லது அவர்களுக்கான தொழில்வாய்ப்புக்கள் குறித்து நம்பிக்கை தரவல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது மிகக்குறைவாகவே உள்ளது.

பட்டப்படிப்பையும், உயர்தரத்தையும் தகுதியாகக் கொண்டவர்கள் - தொழிநுட்ப அறிவுசார் பயிற்சிகளில், கணினித்துறைசார் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளபோது-

பாடசாலைக் கல்வியோடு காத்திருப்போருக்கான அறிவூட்டல் தொடர்பான பயிற்சிகளும், சுயதொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்புக்களும் மிகக்குறைந்தளவு வீதத்திலேயே வழங்கப்படுவதாக - சமூகவியலாளர்களும், கல்வியியலாளர்களும் கவலையுடன் குறிப்பிடுகின்றனர்.

பாடசாலை மட்டக்கல்விக்கு அப்பால் - உயர்தரத்தைத் தொடரமுடியாத பட்சத்தில் அவர்களுக்கான தொழில்நுட்ப அறிவை, துறைசார் பயிற்சிகளை வழங்குவதற்குத் தற்போதுள்ள கல்வி நிறுவனங்கள் இன்னமும் விரிவாக்கமும் வளர்ச்சியும் பெறவேண்டுமென்ற கருத்தை அவர்கள் முன்வைக்கின்றனர்.

அதேபோல - பாடசாலைக்கல்வியோடு - சுயதொழில் முயற்சியை மேற்கொள்ள விரும்புவோருக்குத் தேவையான உதவிகளும், ஊக்குவிப்புக்களும் வழங்கப்படும் முறைகள் தொடர்பான குறைகளும் இன்னமும் களைந்தபாடில்லை.

சுயதொழில் முயற்சிக்கான உதவியை - தென்னிலங்கையில் தேவைப்படுவோரைத் தேடிச்சென்று வழங்கும் வேகம் இருக்க,

- வட, கிழக்கில் யுத்தத்தின் தீவிரமும், கடனுதவி வழங்கும் நிறுவனங்களின் மந்தமான செயற்பாடுகளுமாக - சுயதொழில் ஊக்குவிப்பை இன்னமும் சமூகத்திற்குள் எடுத்துச்செல்லாத நிலையே காணப்படுகின்றது.

எனவே - வேலைவாய்ப்பற்றிருப்போர் என்ற பொதுவான பிரச்சினையில் - பாடசாலை மட்டக் கல்வியுடன் எதிர்காலத்துக்கான சரியான தளமின்றிப் போராடுபவர்களின் விவகாரம் - சிறப்புப் பிரச்சினையாகக் கருத்திற்கொள்ளப்பட்டு அவர்களுக்கான உதவிகளையும், ஊக்குவிப்புக்களையும் வழங்கி - அவர்களூடான மனிதவலுவையும் சமூகத்தின் பயன்பாட்டிற்குள் உள்வாங்கிக் கொள்ள கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

# ஐ. தே. க - முஸ்லிம் காங்கிரஸ்; திருமண முறிவுக்கு சில நாட்களே!

## என்கிறார் அன்வர் இஸ்மாயில்

(அம்பாறை )

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான திருமண உறவு முறிந்து, விவாகரத்துப் பெறுவதற்கு வருடங்களோ, மாதங்களோ இல்லை. இன்னும் சில நாட்களேயுள்ளன என முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறை முஸ்லிம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அன்வர் இஸ்மாயில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விளையாட்டுப் போட்டியில் எமது மாணவர்களின் திறமையையிட்டு பெருமைப்படும் அதேவேளை, அரசியல் விளையாட்டுப் போட்டி ஒன்றினையிட்டு நான் அதிகம் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை கூறுபோடுவதற்கும், பிரித்தாளுவதற்கும் - சில நச்சுப் பாம்புகளும், கறையான்களும் படையெடுத்துள்ளன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அழிப்பதன் மூலம், முஸ்லிம் மக்களது அரசியல் எதிர்காலத்தினைச் சூனியமாக்க முயற்சிக்கின்றனர்.

தற்பொழுது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது, முஸ்லிம் தரப்பு மக்களின் பிரதிநிதித்துவம் கிடைக்காமையையிட்டு நாங்கள் கூடிய அக்கறை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## 20 வருட காலமாக படையினர் வசமிருந்த

# திரியாயில் 500 வீடுகள் அமைக்கும் திட்டம் ஆரம்பம்!



அடிக்கல் நாட்டும் வைபவம்

(திருகோணமலை)

20 வருட காலமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் திரியாய்-கட்டுக்குளம் கிராமத்தின் - தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால், அங்கு சென்று மீளக்குடியேறும் மக்களுக்காகப் புதிய வீடமைப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக 500 வீடுகள் அமைக்கப்படவுள்ள இத்திட்டத்தின் அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

1985, 1990 ஆம் ஆண்டுகளில் இந்தக் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து, அகதிமுகாம்களில் வசித்துவரும் 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கே இந்த வீடுகள் வழங்கப்பட்டுள்ளது.

புதிய வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவின் - திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், துரைரட்ணசிங்கம், திருமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜான் லெடாங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# முழுவசதிகளை ஏற்படுத்தியதும் நூலகத்தை யாரும் திறக்கலாம்

## பேபி சுப்பிரமணியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை முழுவசதிகளும் ஏற்படுத்திய பின்னர் திறப்பதற்குப் புலிகள் எந்த ஆட்சேபமும் தெரிவிக்கமாட்டார்கள் எனத் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் பேபி சுப்பிரமணியம் தெரிவித்ததாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நூலகம் முழுமையான வசதிகளுடன்தான் திறக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். அந்த முழு வசதிகளும் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அதை யாராவது திறக்கலாம் என்றும் தெரிவித்த அவர்,

புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனி வெளிநாட்டுக்குக் கல்விகற்கச் சென்றுள்ளதான செய்தியையும் மறுத்துள்ளார்.

# உலக இந்து மாநாடு போட்டிகள் நாளை!

இரண்டாம் உலக இந்து மாநாடு தொடர்பாகப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படும் பண்ணிசை, பேச்சுப் போட்டிகள் நாளை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் அனைவரும் காலை 8.30 மணிக்கு முன்பாக இந்து மகளிர் கல்லூரிக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவு பேச்சுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள், இந்துசமயம் தொடர்பாகத் தாம் விரும்பிய ஏதேனும் ஒரு தலைப்பில் ஆயத்தம் செய்து பேசலாம். இவர்களுக்குரிய நேரம் 5 நிமிடம் ஆகும்.

மத்தியபிரிவு, மேற்பிரிவுகளுக்கான பேச்சுப்போட்டித் தலைப்புகள் அவ்வப்பிரிவின் கட்டுரைப் போட்டிக்குரிய விடயங்களாகவே அமையும். போட்டிகளுக்குரிய தலைப்புக் குலுக்கல்முறை மூலம் தெரிவுசெய்யப்படும்.

தலைப்புக்களில் ஆயத்தம் செய்வதற்கு ஒரு மணித்தியால அவகாசம் வழங்கப்படும்.

மத்திய பிரிவுக்குரிய நேரம் 8 நிமிடங்களும், மேற்பிரிவுக்குரிய நேரம் 10 நிமிடங்களும் ஆகும். பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் - அமைச்சால் வெளியிடப்பட்ட கைநூலில் அந்தந்தப் பிரிவுக்கெனக் குறிப்பிடப்பட்டிருக்கும் பாடல்களில் தாம் விரும்பிய பாடல் ஒன்றையும், நடுவர் குழு குறிப்பிடும் பாடல் ஒன்றையும் பாடல் வேண்டும். சுருதிப்பெட்டியைப் போட்டியாளர் தாமே கொண்டு வருதல் வேண்டும் என்றும் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலக உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## சீருடைத்துணி விநியோகம்

# தகுதியானவர்களை கிராமசேவகர் தெரிவார்

பாடசாலைச் சீருடைக்கான துணிகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கான பொறுப்புக்களை அடுத்த ஆண்டு முதல் நாட்டிலுள்ள கிராம சேவை அதிகாரிகளிடம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

பாடசாலைச் சீருடைகளைப் பெறுவதற்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கான பொறுப்புக்களைச் சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்க ஆலோசிக்கப்பட்டது. எனினும் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

கிராமத்தில் உள்ளவர்களின் உண்மையான விடயங்களைக் கிராமசேவை அதிகாரிகளே நன்கு அறிவார்கள். அதன் காரணமாகவே அடுத்த ஆண்டு முதல் பாடசாலை சீருடைக்கான தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் கிராமசேவை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையின்

# கிரிக்கெட் வீராங்கனைகள் லண்டனில் தலைமறைவு!

(கொழும்பு)

மேற்கிந்தியத்தீவுகள் அணியுடன் நடந்த கிரிக்கெட் சுற்றுத் தொடரில் பங்கேற்கச் சென்ற இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியிலுள்ள மூன்று வீராங்கனைகள் தாயகம் திரும்பும் வழியில் காணமற்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தாயகம் திரும்பும் வழியில் - விமானம் பிரிட்டன் விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டபோதே இவர்கள் காணமற்போயுள்ளனர்.

அணியின் தலைவி சுதர்சினி சிவநாதன், ஹிரோசி அபேசிங்க, ரமணி பெரேரா ஆகிய மூவருக்கு எதிராக ஒழுககாற்று நடவடிக்கை எடுக்கப்போவதாக மகளிர் கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைவி குயூன் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவர்கள் சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புகொண்டு, லண்டனில் உள்ள உயர்ஸ்தானிகராலயத்தின் மூலம் இலங்கைக்கு இவர்களைத் திருப்பியழைக்க நடவடிக்கை எடுக்கப்போவதாகக் குயூன் ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார்.

மூன்று கிரிக்கெட் வீராங்கனைகளும் முன்கூட்டியே திட்டமிட்டு லண்டனில் தலைமறைவானதாக மகளிர் கிரிக்கெட் அணி முகாமையாளர் தெரிவித்தார்.

இவர்கள் அங்கு அடைக்கலம் கோரலாம் எனவும் கூறப்படுகிறது.

# ஈராக் மீதான அமெரிக்க போர் நடவடிக்கை எங்கு தொடங்கி எதில் முடியப்போகின்றது?

**போ**ரின் வடுக்களுக்கு அர்த்தம் கற்பிக்கும் மேற்குலகத்தினது அடாவடித்தனத்தின் இன்னோர் போர், ஈராக் மீது நிகழ்த்தப்படுகின்றது. ஈராக்கின் தலைநகரத்தை கைப்பற்றும் இலக்குடன் நிகழும் அமெரிக்க - பிரிட்டன் கூட்டுப்படை



காலமே பதில் சொல்லும்...!

பல நெருக்கடிகளையும், அபாயத்தையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. போர் தொடங்கி ஒருவாரம் பூர்த்தியாகிவிட்டது.

இலக்கின் அடைவு பதினைந்து நாட்கள் எனத் திட்டமிடப்பட்டதில் பாதிநாட்கள் முடிந்தபோதும், இலக்கில் 50 சதவீதத்தினையேனும் கூட்டுப்படைகள் எட்டவில்லை. கூட்டுப்படைகள் வெற்றிபெறும் வாய்ப்புச் சாத்தியப்படலாம். ஆனால், அது அவர்கள் திட்டமிட்ட காலப்பகுதியிலல்ல. நீண்ட காலப்பகுதிக்குப் பின்பே பக்தாக் என்ற நகரத்தை அவர்கள் கைப்பற்றலாம்.

அப்படியான சூழலில் நகரத்தைக் கைப்பற்றும்போது ஈராக்கின் தலைமையும், மக்களும் வேறு ஒரு நகரத்திலிருந்து தாக்குதலை நடாத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வாரம் ஈராக்கிய மக்களின் அரசியல் விழிப்புணர்வையும், இயற்கை சதாமுக்கு அளித்துள்ள வாய்ப்பினையும் நோக்குவோம்.

ஈராக் மக்கள் தொகையில் ஏறக்குறைய 15 வீதத்தினரே குர்திஷ் மக்கள். அவர்களும் துருக்கியை அண்டிய பிரதேசத்திலுள்ள கிர்குக், அவாச் பகுதிகளிலேயே அதிகமாக வாழ்கின்றனர். இதனால் குர்திஸ் மக்கள் வாழும் பகுதியை அண்டிக் கூட்டுப்படைகளின் நகர்வுக்குத் திட்டமிடப்பட்டது.

அப்பகுதியில் வாழும் மக்களது உணர்வுகள்கூட கூட்டுப்படைகளுக்குச் சாதகமற்றதாக விளங்குகிறது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏனெனில், இம்மக்கள் மீதே சதாம் ஹூசைன் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதுடன், மூர்க்கத்தனமாகக் குர்திஷ் மக்களது போராட்டத்தை அப்போது நசுக்கியிருந்தார்.

தனது சொந்தநாட்டு மக்களைக் கொடுமையானமுறையில் அழித்திருந்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால், அவ்வகையான அழிவுகளைச் சதாமால் எதிர்கொண்ட மக்கள் - ஏன் கூட்டுப்படைகளை ஆதரிக்காது செயற்படுவதும், சதாமுக்கு எதிராக கிளர்ச்சி செய்யாதுள்ளனர் என்பதே கூட்டுப்படைகளின் வழிநடத்துநர்களுக்குக் குழப்பமாகவுள்ளது. அதாவது, கூட்டுப்படைகளின் பிரதான அரசியற்தந்திரத்தையும், கடந்தகால அனுபவத்தினையும் பகிர்ந்து கொண்டநிலையிலேயே இவ்வாறு செயற்படுகின்றமை கூட்டுப்படைகளுக்கு அபாயமாகவுள்ளது.

ஏனைய ஈராக்கிய மக்களின் உணர்வுகளை அவர்களது போராட்ட வலுவிலிருந்தே விளங்கிக் கொள்ள முடியும். ஆயுதங்களுடன் ஆண்கள், பெண்கள், வயோதிபர், இளையவர் என்ற வேறுபாடுகள் எவையுமின்றி போரில் பங்கெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

சதாம் 1979 களில் ஆட்சிக்கு வந்தபின்பு - பல யுத்தங்களையும், படையெடுப்புக்களையும் ஈராக்கிய மக்கள் சந்தித்தவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. அயலிலுள்ள அரசுகளதும், பன்னாட்டுப் படைகளதும் படையெடுப்புக்களால் சாதமும், ஈராக்கிய மக்களும் நல்ல அரசியல் அனுபவத்தைப் பகிர்ந்துள்ளனர். ஏனெனில், தற்போதைய போர் தொடங்கி பல நாட்களுக்குப் பின்பும் பெரியளவிலான ஈராக்கிய மக்கள் நாட்டைவிட்டு ஓடவில்லை. எந்த அகதிகளுக்கான முகாம்களுக்கும் படையெடுத்துச் செல்லவில்லை.

ஈராக்கின் நகரங்கள், குடியிருப்புக்கள், மக்கள் கூடுகின்ற அங்காடிகள் எங்கும் - அமெரிக்க ஜனநாயக விரும்பிகளின் விமானங்களும், ஏவுகணைகளும் குண்டுகளைப் பொழிந்தவண்ணமுள்ளன. அப்படியான உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டபோதும், பல நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட பின்பும், பல நூற்றுக்கணக்கான மக்கள், சிறுவர்கள் காயப்பட்ட பின்பும் ஈராக்கிய மக்கள் நாட்டைவிட்டு ஓடவில்லை.

சாதம் ஹூசைன் 99 சதவீத வாக்குகளால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட செய்தியை உலக ஜனநாயகவாதிகளும், அமெரிக்க நலன்விரும்பிகளும் கொச்சைப் படுத்தி விமர்சித்தனர். அதன் பெறுமானத்தையும், விளைவையும் தற்போது உணரமுடிகின்றது. அமெரிக்க ஜனநாயகவாதிகள் மீது அமெரிக்க மக்கள் கொண்டுள்ள போர் எதிர்ப்புக்களின் பின்னணியில் அமெரிக்க ஆட்சியாளரை - அமெரிக்க மக்கள் நிராகரிக்கும்போது, ஈராக் மக்கள் சதாம் ஹூசைனுக்குப் பின்னால் அணிவகுத்திருப்பது உலகத்திற்கு ஆச்சரியமானதாக இருக்கும்.

ஆனால், யதார்த்தத்தில் கீழைத்தேசத்தின் அரசியற்தலைமைகள்- சதாமின் அரசியல் மயப்படுத்தலைப் பற்றிய அனுபவத்தினைக் கற்றுக்கொள்ளுதல் அவசியம். முழு உலகமும் திரண்டுவரும் நிலையிலும், தலைமையின் மீது விசுவாசம் கொண்டிருப்பதுடன், போருக்காக அணிதிரண்டு போராடும் மனோநிலை ஈராக்கியரிடம் வளர்ந்திருப்பது- அந்த மக்களது அரசியல் ஆரோக்கியத்தினைக் காட்டுகின்றது. இது போருக்குப் பிந்தியதான ஈராக்கிய அரசியலைத் தீர்மானிக்கவல்லதாக அமையும் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

அமெரிக்கர்கள் எதிர்பார்ப்பது போல் போர் முடிந்துவிட்டால், ஈராக் தமது வசமாகிவிடும் என்றநிலை பற்றிய கருத்து மீளவும் பரிசீலிக்கப்பட வேண்டியதாக அமையும்.

ஈராக் மீதான போரும், அதன் விளைவுகளும் கீழைத்தேச நாடுகளின் அரசியற்தலைமைகளுக்கு நல்ல அனுபவமாக அமைதல் வேண்டும். மக்களின் பலத்தை உணராத போக்கு அநேகமான நாடுகளில் காணப்படுகின்றது. மக்கள் அரசியல் விழிப்புணர்வை பெறவேண்டும் என்ற உணர்வேதுமின்றியிருக்கும் அரசியல் தலைமைகளும் அதிகம் காணப்படுகின்றன.

மேற்கு நாடுகளின் அரசியல் நலனுக்குத் தலையசைத்துக் கொண்டிருக்கும் அரசியற்தலைமைகளால், கீழைத்தேசத்தில் ஏற்படப்போகும் மாறுதல் எதுவுமில்லை என்று கூறலாம். அத்தகைய அடிவருடிகளுக்குச் சதாம் நல்ல படிப்பினையாளர் என்பதில் தவறேதுமில்லை.

இனி, ஈராக் போரின் நிலவரத்தை சற்று நோக்குவோம். ஈராக் போர் அமெரிக்கக் கூட்டுப்படையின் கணக்குகளையெல்லாம் பொடியாக்கிவிட்டது. புஷ்ஷும்-பிளேயரும் உலகத்துக்குப் பொய்யுரைத்தார்கள் என்பது தெளிவாகிவிட்டது. அமெரிக்கப் புலனாய்வுத்துறைகூட **(CIA)** வலுவற்ற அல்லது பலவீனமான அமைப்பாகிவிட்டது என்பது கண்கூடாகத் தெரியும் அம்சமாகும்.

சதாமின் படைகள் எதிர்த்து போராடும் திறன்கொண்டவர்களாக மாறியுள்ளனர். அதுமட்டுமல்ல, சதாமின் படைகள் - அமெரிக்கப் படைகளைக் கைதுசெய்யவும், பாரிய பலம் எனக்கருதிய அப்பாச்சோ ஹெலிகொப்ரரைச் சுட்டுவீழ்த்திய நிகழ்வும், அவர்களின் பலத்துக்கு உந்துதலைக் கொடுத்துள்ளது. மேலும், அமெரிக்கப் படைகளைக் கைதுசெய்த செய்தியை, ஈராக்கியர் வெளியிட்டபோது - 'ஜனநாயக விரும்பி' வில்லியம் புஷ் விறைத்துப் போயிருப்பார் என்பதற்கு அவரது அடுத்த நிமிட உரை கட்டியம் கூறியுள்ளது.

ஈராக் மீது போர் தொடுக்கும் போது - ஜெனீவா உடன்பாட்டையோ, ஐக்கிய நாடுகள் சபையையோ மறந்திருந்த புஷ் - திடீரென நினைவு திரும்பிய மனநோயாளிபோல் ஜெனீவா உடன்பாட்டின் கீழ் தனது படைகளை - ஈராக் பராமரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

ஈராக்கியரின் பக்தாத் நகரத்தை அண்மித்துவிட்டதாகப் போர் தொடங்கியநாளிலிருந்து அமெரிக்க - பிரிட்டிஷ் இராணுவ தளபதிகளும், அவர்களின் ஊடகங்களும் சொல்லிக்கொள்கின்றன. ஆனால், அவர்கள் தற்போது குவைத்தின் எல்லையோர ஈராக்கியரின் நகரமான பஸ்ராவில் தான் போரிபுரிகிறார்கள். பஸ்ராவை தவிர்த்தநிலையில் நஜிராவை அடைந்திருக்கிறார்கள். அதேபோன்று, துருக்கியின் எல்லையோர ஈராக்கிய நகரமான கிர்குக் பக்கமும் கூட்டுப்படைகளது இன்னோர் பிரிவினர் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். தற்போது இப்பகுதியில் பரசூட் மூலம் ஆயிரக்கணக்கான படைகளைக் குவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஈராக்கியரின் போர் அணுகுமுறை சற்று வித்தியாசமானதாக அமைந்து வருகின்றது. அதாவது, தாக்கிவிட்டு மறைந்துபோகும் போக்கு, அமெரிக்கக் கூட்டுப்படைக்குப் நெருக்கடியாகவுள்ளது. வியட்நாம் போரில் பங்கேற்றவரில் ஒருவர் கொலின் பவல் என்றால் அமெரிக்கப் படைகளின் கெரில்லாத் தாக்குதலின் அனுபவப் படைப்பிரிவினர்- ஓய்வூதியக்காரர்களாக இருப்பார்கள்.

அவர்கள் ஆலோசனை வழங்கலாமே அன்றி களத்தில் நின்று போராடமுடியாது. இதனால், கூட்டுப்படைகள் அதிக இழப்பீடுகளை எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்பட வாய்ப்பு அதிகமுண்டு. அத்துடன், ஈராக்கியப் படைகளுக்குக் காலநிலை நல்ல வாய்ப்பினை அவ்வப்போது வழங்கி வருகின்றது. எண்ணெய் வயல்கள் எரிவதால் ஏற்படும் அபாயம்போன்று, புழுதிமழை அமெரிக்கக் கூட்டுப்படைகளுக்கு அதிர்ச்சி வைத்தியத்தை ஏற்படுத்தியுள்ளது.

புழுதிமழை தற்காலிகமாக நிறுத்தப்பட்டாலும் நிச்சயமில்லாதது. திடீரென வரக்கூடிய வாய்ப்பு அதிகமுண்டு. அதற்கு முகங்கொடுப்பதுடன், பாலைவனத்தில் எதிர்நோக்கவுள்ள அசௌகரியங்கள் அதிகபாதிப்பினை ஏற்படுத்தவுள்ளது.



சாதிப்பது எதுவரை...?

தற்போது சதாம் - உயிரியல், இரசாயனவியல் ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என்ற அச்சமும் அதிகரித்துள்ளது. இனிக் கூட்டுப்படைகள் தலைக்கவசமின்றி நகர்வைச் சாத்தியப்படுத்த வாய்ப்பில்லை. தலைக்கவசம் பாலைவனத்தில் எத்தனை மணித்தியாலங்கள் தொடர்ந்து பாவிப்பது என்பது அடுத்த அதிர்ச்சியாக மாறவுள்ளது. எண்ணெய் வயல்கள் எரிக்கப்படாது விட்டிருந்தால், புழுதிமழை தொடர அதிக வாய்ப்பு உண்டு என்ற கருத்தும் நிலவுகின்றது.

எனவே, ஈராக் மீது தொடுத்துள்ள அமெரிக்கக் கூட்டுப்படைகளின் போர் நீடிக்க வாய்ப்புண்டு என வில்லியம் புஷ் கூறியுள்ளார். அவ்வாறு போர் நீடித்தால், அமெரிக்க மக்களின் எதிர்ப்பு தீவிரமாக வாய்ப்புள்ளது. அத்துடன், உலகம் முழுவதும் அமெரிக்க எதிர்ப்பு உணர்வு மேலும் அதிகரிக்கும்.

தற்போதையநிலையிலேயே அமெரிக்காவின் மீது எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக - அமெரிக்க உற்பத்திகளை - இஸ்லாமிய மக்கள் நிராகரித்து வருகின்றனர். ஜேர்மனிய, பிரான்சிய உற்பத்திப் பொருட்களுக்கே முஸ்லிம் நாடுகள் முதலிடம் கொடுப்பதனைக் காணமுடிகின்றது. எனவே, போர் நீடித்தால் அமெரிக்க மக்கள் மட்டுமல்ல, முழு உலகமும் போருக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டுவதாக அமையும்.

அத்தகையநிலை அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பாதிப்பதுடன், புஷ்ஷின் கொள்கைகள் குழிதோண்டிப் புதைக்கவேண்டியநிலை ஏற்படும். மீண்டும் குடியரசுக் கட்சியினர் எட்டாண்டுகள் ஆட்சிக்கு வரமுடியாதநிலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகரிக்கின்றன.

**War summit** அமெரிக்காவில் புஷ் - பிளேயர் மத்தியில் நடைபெற்றது. அதில் பாலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினைக்குத் தீர்வுகாணுவது பற்றிப் பேசப்பட்டது. மேலும், ஈராக்கில் நிகழ்ந்துவரும் அழிவினை ஈடு செய்யும் விதத்தில் ஐ.நா.சபையின் உறுப்பு நாடுகள் ஈடுபடவேண்டும். போருக்குப் பிந்திய ஈராக்கினை நிர்வகிக்கும் தலைமை பற்றியும் அவ்வுச்சி மாநாட்டில் பேசப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இவையாவும் அரசியல் வார்த்தை ஜாலங்கள் மட்டும் என்பது ஈராக்கிய மக்களுக்கோ, இஸ்லாமிய மக்களுக்கோ தெரியாததல்ல. இவை எதனையும் புஷ்ஷும்- பிளேயரும் நிகழ்த்தி முடிப்பார்கள் என்றோ, அதனை நம்பி அரபுக்கள் செயற்படுவார்கள் என்றோ கருதமுடியாது. அந்தளவுக்கு அரபுக்கள் முட்டாள்களும் அல்ல, ஏமாளிகளும் அல்ல.

எனவே, ஈராக் மீதான போர் - உலக அரசியலில் அதிர்ச்சியான கட்டத்தை அடைந்துகொண்டு இருக்கின்றது. ஐ.நா.சபையை நிராகரித்த அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள், மீளவும் ஐ.நா. சபையிடமே கையேந்தும்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. மக்களின் எழுச்சிக்கு முன்னால் ஆயுத பலமும், ஆக்கிரமிப்பும் நீண்டகாலம் நிலைபெறமுடியாது என்பதற்கு நல்ல பாடமாக ஈராக் போர் மாறியுள்ளது. ☆

**கே.ரி.கணேசலிங்கம்**

# சிறுமியை வைத்து ஆபாசப்படம் தயாரிப்பு; பொலிஸாருடன் பொதுமக்கள் கடும் மோதல்!

## கொழும்பு நகரில் சம்பவம்

கொழும்பு நகரில் உள்ள உறுகொடவத்தையில் வீடொன்றில் இருந்து சிறுமி ஒருவர் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே இடம்பெற்ற கைகலப்பில் 15 பேர் காயமடைந்தனர். பொலிசார் மீது கற்களை வீசிய பொதுமக்கள் வீதிகளில் ரயர்களையும் போட்டு எரித்தனர். இதனால் பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

சிறுமியொருவர் வீடொன்றில் கைகள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அந்த சிறுமியை மீட்கும்படியும் பொதுமக்கள் பொலிசாரிடம் முறையிட்டனர். அங்கு வந்து சோதனையிட்ட பொலிஸார் அவ்வாறு எவரும் இல்லையென்றனர். ஆனால் அதனை நம்பாத பொதுமக்கள் குறித்த வீட்டை முற்றுகையிட்டு சிறுமியை மீட்டெடுத்தனர்.

இதன் பின்னர் அங்கு நின்ற பொதுமக்கள் பொலிசார் மீது சந்தேகம் கொண்டு அவர்கள் மீது தாக்கினர். இதனால் ஏற்பட்ட கலவரத்தில் மூன்று பொலிசார் உட்பட 15 பேர் காயமடைந்தனர். குறித்த சிறுமியை வைத்து ஆபாசப்படம் தயாரிக்கப்பட்டிருப்பதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். அந்த வீட்டிலிருந்து ஆபாசப்படங்கள் சிலவும் பொதுமக்களால் கைப்பற்றப்பட்டது.

சில நாட்களாக குறித்த வீட்டிற்கு வந்துபோவோர் குறித்து பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டதாகவும் பொலிசாருக்கு ஏற்கனவே அறிவித்து அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர்.

நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை அந்தப்பகுதியில் போக்குவரத்துக்கள் தடைப்படிருந்தன.

### குடிபெயர்வுக்கான சர்வதேச நிறுவன அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

குடிபெயர்வுக்கான சர்வதேச நிறுவனம் - தனது அலுவலகம் ஒன்றினை யாழ்.கோவில் வீதியில் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி திறக்கவுள்ளது.

இந்நிறுவனத்தை அதன் பணிப்பாளர் பிறவுன்சன் மக்கென்லீ திறந்து வைப்பார். (சு)

# பக்தாத்தைக் கைப்பற்றும் ஈராக் போர்க்களம்

## நீண்ட போர் தொடர்கிறது



ஈராக் பாதுகாப்பு அமைச்சர் சுல்தான் ஹசீம் அஹமட் எச்சரித்துள்ளார். எனினும், போர் நீண்டுசென்றாலும் ஈராக் அதிகாரபீடத்திலிருந்து சதாமை அகற்றும்வரை நாங்கள் ஓயப் போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி புஷ் குறிப்பிட்டார்.

இதேசமயம், ஈராக்கின் தொலைததொடர்பு நிலையங்களைக் குறிவைத்து நேற்று முன்தினமிரவு நாலாயிரம் கிலோ பர்கர் பஸ்ரர் குண்டுகள் வீசப்பட்டதாக, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இக்குண்டு வீச்சுக்களில் 7 ஈராக்கியர் பலியாகினர். 92 பேர் காயமுற்றுள்ளனர். இதே போன்று பஸ்ரா நகர் மீதான குண்டு வீச்சில் 116 பொதுமக்கள் பலியாகியுள்ளதாகவும் 659 பேர் காயமுற்றுள்ளதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது. பஸ்ராவில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

ஈராக்கின் போர் முனைக்கு மேலும் 120,000 அமெரிக்கப் படைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பக்தாத் செல்லும் பாதையில் முக்கியமான பாலம் அமைந்துள்ள சமாஹ்வா என்ற பகுதியில் அமெரிக்கத் துருப்புக்களுக்கும் ஈராக்கின் பெதயீன் படைகளுக்கும் இடையில் கடும்போர் இடம்பெற்று வருகின்றது.

அமெரிக்கப் படைகள் பக்தாத்தை 5 அல்லது 10 நாட்களுக்குள் சுற்றி வளைத்துவிடுவர் என எதிர்பார்க்கப்படுவதாக ஈராக் பாதுகாப்பு அமைச்சர் ஹஷேம் அஹமட் தெரிவித்துள்ளார்.

எனினும், ஒவ்வொரு வீதியிலும் அமெரிக்கப் படைகள் போராட வேண்டியிருக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

இதனிடையே பிரிட்டிஷ் கப்பலான சேர் கலாஹெட், 650 தொன் உணவு மற்றும் நீர் என்பவற்றை எடுத்துக் கொண்டு ஈராக் துறைமுக நகரான உம் - காசிரை வந்தடைந்துள்ளது.

தலைநகர் பக்தாத்தினுள் எதிரிப் படைகள் நுழைந்தால், அதுவே அவர்களது புதைகுழியாகும் என



இரவில் தாக்குதல் நடத்த - விமானம் தாங்கிக் கப்பலில் - தயாரான நிலையில் அமெரிக்கக் கடற்படையின் எவ்.ஏ - 18 ஏ தாக்குதல் விமானம்.

## திட்டமிட்டதை விட வேறுபட்டுள்ள போர்

### அமெரிக்க மூத்த படையதிகாரி தெரிவிப்பு



ஈராக்கில், காலநிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து பக்தாத் மீது அமெரிக்க - பிரிட்டிஷ் விமானப் படையின் தாக்குதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. போர் பல முனைகளில் நடைபெறுவதால், எதிர்பார்த்தபடி படைநகர்வை விரைவாக நடாத்த முடியாதுள்ளதாக கூட்டுப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எங்களது இப்போதைய எதிரி நாம் முன்பு கண்ட எதிரிகளைவிட வித்தியாசமானவனாக உள்ளான் என அமெரிக்க இராணுவக் கட்டளை அதிகாரி லெப்.ஜெனரல் வில்லியம் வெலஸ் தெரிவித்தார். அமெரிக்க யுத்தத்தை திட்டமிடுபவர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக ஈராக்கில் போர் நடைபெறுவதை பென்ரகன் வட்டாரங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஈராக்கின் தெற்கில் அமெரிக்கப் படைகளின் விநியோகப்பாதை மிக நீண்டதாக இருப்பதால் - இப்பாதை ஈராக்கியர்களின் கெரில்லா தாக்குதல்களுக்குள்ளாகும் அச்சுறுத்தல் உள்ளதாக அவர் கூறுகின்றார்.



பஸ்ராவில் மோட்டார் குண்டுத் தாக்குதல் நடத்தும் பிரிட்டிஷ் துருப்புக்கள்.

## விடுதிகளில் உல்லாசம் காணும் இளைஞர்களுக்கு எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியிலுள்ள விடுதிகளில் உல்லாசமாகப் பொழுதைக் கழித்த இளைஞர், யுவதிகள் சிலர் அண்மையில் கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினரால் எச்சரிக்கை செய்யப்பட்டு அறிவுரைகூறி அனுப்பப்பட்டனர்.

வெளியிடங்களைச் சேர்ந்தோர் போல் நடித்து, இவர்கள் விடுதிகளில் தங்கிநின்று தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். விடுதிகளில் தங்க வருவோரில் அவசியமில்லாதவர்க்கு விடுதியறைகளை வழங்கவேண்டாமென விடுதி உரிமையாளர்கள் கலாசாரத்தினைப்பேணும் குழுவினரால் கேட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (111)

## பிரதேச செயலர்கள் அலுவலகத்தில் இரு நாட்கள் இருப்பது அவசியம்

வாரத்தில் திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் தமது அலுவலங்களில் இருந்து பொதுமக்களைச் சந்தித்து, அவர்களுக்கான பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண அமைச்சின் செயலாளர் ஏ.ஐ.விக்ரம்- சகல அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்குச் சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - திங்கட்கிழமையும், புதன்கிழமையும் ஏனைய வெளிக்கள வேலைகளில் பங்குபற்ற வேண்டாம் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (118)



யாழ். வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் கதிர் செல்வநாயகம் அகவை அறுபதில் ஓய்வு பெறுவதையிட்டுப் பாடசாலை சமுகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் மாணவி அதிபரை வாழ்த்தி வாழ்த்துப்பா பாடுவதையும், வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### அழகெழல் போட்டி பரிசளிப்பும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தால் நடாத்தப்பட்ட "அழகெழல்" போட்டியின் பரிசளிப்புவிழா இன்று நடைபெறவுள்ளது.

வெற்றியீட்டிய மாணவர்களும், ஆறுதல் பரிசு பெறும் மாணவர்களும் கல்லூரிக்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். நிகழ்வில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற இசை, நடன, நாடக நிகழ்வுகளும் இடம்பெறும். சித்திரப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களின் ஓவியங்களும் இங்கு காட்சிப்படுத்தப்படும்.

### பாராட்டு விழா

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தா சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம். குணசிங்கத்துக்கு, உதைபந்தாட்ட சம்மேளனத்தின் விருது கிடைத்தமையைப் பாராட்டி நாளை காலை 10.30 மணிக்கு மத்தியஸ்தர் சங்கத்தில் நடைபெறும் நிகழ்வில் மத்தியஸ்தர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர்களுக்கு ஆலோசனைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆலோசனையும், வழிகாட்டலும் பற்றிய பயிற்சிகள் நேற்றுமுதல் நடைபெற்று வருகின்றது. சாந்திகம் உளவளத்துறை நிலையத்தில் இப்பயிற்சிகள் நாளை வரை நடைபெறும். பாடசாலை மாணவர்களுக்கிடையிலுள்ள உள நெருக்கீடுகளை இனங்கண்டு, அவற்றிலிருந்து மாணவர்களை விடுவித்து, உள மேம்பாட்டினை கட்டி வளர்க்கும் வகையில் புதிய பயிற்றுநர்களை - ஆசிரியர் மத்தியில் தெரிவு செய்து அவர்களுக்குச் சாந்திகம் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

## தமிழ்மொழி தினப்போட்டிகள் ஜூன் 14, 15 ஆம் திகதிகளில்

வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் - மாகாண மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் 14 ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

ஜூன் மாதத்துக்கு முன்னர் பாடசாலை மட்ட, வலயமட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் நடத்தப்படும். இது தொடர்பான சுற்றறிக்கைகள் வலயக்கல்விப் பணிமனைகள் ஊடாகப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் , சுற்றறிக்கைகள் கிடைக்காத பாடசாலைகள் வலயக்கல்விப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளுமாறும் வட-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக்கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் தெரிவித்தார்.


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : வ.ஜதுர்ஷன்
முகவரி : கலைவாணி மில் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு,

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland


எண்ணெய்க் கிணறுகள் எரிந்தாலும், ஏவுகணை வீழ்ந்தாலும் - பக்தாத்தில் பந்தடித்து மகிழ்கிறது இளைஞர் குழு.

# பேச்சில் முஸ்லிம்கள் தனித்தரப்பு; பிரபாகரனே முடிவெடுக்க முடியும்!

## பிரதி அமைச்சர் சேகுதாவூத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக, அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் வெளிநாடுகளில் தற்போது நடைபெற்றுவரும் பேச்சுக்களில் - முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாகக் கலந்துகொள்வது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பும், கருத்து வெளியிடும் அதிகாரமும் தமிழீழ விடுதலைப புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கே உள்ளது.

-இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், வீடமைப்புப் பிரதி அமைச்சருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த விடயம் தொடர்பாக அவருடன் பேச்சுவார்த்தை நடாத்தி, அவருடைய கருத்துக்களை அறியும் வரை எந்தவித முடிவுக்கும் வரமுடியாது என்றும் கூறினார்.

# ரோக்கியோ நிதி மாநாட்டிற்கு ஐரோப்பிய யூனியனும் தலைமை

இந்த ஆண்டு ஜுன் மாதம் ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில், நான்காவது நாடாக தலைமைத்துவம் தாங்குவதற்கு ஐரோப்பிய யூனியன் முன்வந்துள்ளது என்று அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியனின் பதினைந்து நாடுகள், இலங்கைக்கு உதவி வழங்கும் நடவடிக்கைக்கு ஆதரவுதர உறுதி பூண்டிருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகாரத்துக்கான உயர் பிரதிநிதி கலாநிதி சேவியர் ஷொலானா, இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாக வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளர் கிரிற் பஷன், இலங்கை அரசாங்கத்திடம் நேற்று அறிவித்தார்.

இலங்கை நிலைமை தொடர்பாக, 1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் 21 தீர்மானங்களும், அமைச்சர் மன்றத்தால் 18 அறிக்கைகளும் நிறைவேற்றப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

1986 ஆம் ஆண்டில் இலங்கை நிலைமை பற்றிய ஐரோப்பிய யூனியனின் விசேட அறிக்கையில், பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக்காண வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதுடன், தீர்வுக்குப் பின்னர் புனரமைப்புக்கு உதவி வழங்க இருப்பதாகவும் உறுதி வழங்கப்பட்டிருக்கின்றது. முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, நேற்று முன்தினம் எடுத்த முடிவும் உள்ளது என்று அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

ரோக்கியோ உதவி வழங்[illegible] மாநாட்டுக்கு - அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய யூனியன் ஆகிய நான்கு நாடுகளும் கூட்டுத்தலைமை தாங்கவிருக்கின்றன.

# அமெரிக்கத் தாக்குதலுக்கு இலங்கை அரசு ஆதரவா?

## கேள்வி எழுப்புகின்றார் அமுனுகம

ஈராக் மீதான அமெரிக்கத்தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் ஆதரவு வழங்குகிறதா என்ற சந்தேகம் தமக்கு ஏற்பட்டிருப்பதாக, பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சியின் பேச்சாளர் சரத் அமுனுகம சந்தேகம் தெரிவித்துள்ளார்.

நேற்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு சரத் அமுனுகம சந்தேகம் எழுப்பினார். மேலும் அவர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றுகையில் - ஈராக் மீதான போரின்போது சர்வதேச சந்தையில் பெற்றோலியத்தின் விலை குறைந்துள்ளபோதும், இலங்கையில் மட்டும் அரசாங்கம் தனது செலவினை அடைப்பதற்காக பெற்றோலிய விலையைக் கூட்டியுள்ளதாகக் குற்றஞ்சாட்டினார். (01)

### சீன...

தலில் 17 சீன மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

இது மிகப் பெரிய பயங்கரவாதச் செயல் என, கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட் நேற்றுத் தெரிவித்தார்

### ஈராக் போரை...

இலங்கை ஆதரவளிக்கிறதா என்று பொதுஜன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் சரத் அமுனுகம எழுப்பிய கேள்வி தொடர்பாகப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### மிதிவெடியில்...

சிவரூபன் (வயது 24) என்ற இளைஞனே வலதுகாலை இழந்தவராவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்தகால யுத்த நடவடிக்கையின் போது, இப் பகுதியில் முகாமிட்டிருந்த படையினர், இங்கிருந்து வெளியேறிய பின் இப்பகுதியை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். (ச,111,சு)

# தமிழ்ச்செல்வன்...

புறப்பட்ட தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் கேணல் கருணா உள்ளடங்கிய குழு, நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தனர்.

பின்னர் அங்கிருந்து இலங்கை வான்படையின் உலங்குவானூர்தி மூலம், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலணிப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் ஊடகவியலாளர்களும் நேற்றுக்காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி வந்தடைந்தனர்.

இவர்களை தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா, முக்கிய உறுப்பினர் பாலகுமாரன், அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா, கள மருத்துப் பிரிவுப் பொறுப்பாளர் மனு மற்றும் றெஜி ஆகியோரும் வரவேற்றனர்.

இதேவேளை, மூத்த தளபதி கேணல் கருணா கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து உலங்குவானூர்தி மூலம் நேற்றுக் காலை 8.30 மணிக்கு மட்டக்களப்பைச் சென்றடைந்தார்.

மட்டக்களப்பு, பளுகாமம் பாடசாலை மைதானத்தைச் சென்றடைந்த கேணல் கருணாவை, மட்டு. - அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ், மட்டு - அம்பாறைத் தளபதி ராம், மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட பலரும் வரவேற்றனர். (க,லி)

# ஈராக் மீதான போரினால் தேயிலை விற்பனை வீழ்ச்சி

21 லட்சம் கிலோகிராம் தேயிலையை விற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

கொழும்பு தேயிலைச் சந்தையில் 36 லட்சம் கிலோ கிராம் தேயிலை விற்பனைக்காக விடப்பட்டபோது, 12 லட்சம் கிலோகிராம் தேயிலையையே விற்பனை செய்ய முடிந்தது.

அமெரிக்கா, ஈராக் மீது மேற்கொண்டு வரும் தாக்குதல் காரணமாகவே தேயிலை விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையில், 50 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதில் 21 வீதம் ஈராக்குக்கு ஏற்றுமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

திருமறைக் கலாமன்றம்
நடத்தும்
கல்வாரி இராகங்கள்-3
(கடந்த ஆண்டில் மேடையேற்றப்பட்ட "கல்வாரி யாகம்" திருப்பாடுகளின் காட்சிப் பாடல்கள்)
ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா
காலம் :- இன்று (29.03.2003) சனிக்கிழமை
நேரம் :- மாலை 4.30 மணி
இடம் :- மன்ற கலைத்தூது மணி மண்டபம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
-திருமறைக்கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-722)

கணினி பக்க வடிவமைப்பாளர் தேவை
COREL DRAW, PAGE MAKER இல்
அனுபவமுள்ள கணினி பக்க வடிவமைப்பாளர்கள்
எதிர்வரும் 30-03-2003 இற்கு முன்னதாக அலுவலக நேரத்தில் பொது முகாமையாளரை நேரில் வந்து சந்திக்கவும்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.63 | 97.11 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.78 | 152.43 |
| 1 யூரோ | 102.80 | 104.08 |
| 1 சுவிஸ் பிராங் | 69.38 | 70.58 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 57.46 | 58.57 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.85 | 25.85 |

கொமர்ஷல் வங்கி
உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka
INSTITUTE OF Informatics Studies
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
Elephant house
Necto
அனுசரணையில்
நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த (உயர்தரம்) 2003
வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் இலவச முன்னோடிக் கருத்தரங்கு
விபரங்கள் விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்
(ஈ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.